36,000 கிலோமீட்டர் வரையிலும் படுத்தும் விதத்திலும் உள்ளது.

# 7-அப் லெமன் பட்டாளம் திருச்சிக்கு வருகை

**திருச்சி, பிப்.18:**

**7-அப் லெமன் பட்டாளம் அணி, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியுடன் விளையாட திருச்சிக்கு வருகிறது. திருச்சி கிரிக்கெட் ரசிகர்களுக்கு இது ஒரு பொன்னான வாய்ப்பாகும்.**

தீவிரமானமுறையில் கடும் போட்டிகளுக்கு பிறகு தேர்வு செய்யப்படும் 7 பேரைக் கொண்ட 7-அப் லெமன் பட்டாளம்அணி சென்னை சூப்பர் கிங்ஸ் -ல் உள்ள தங்கள் முன்மாதிரி வீரர்களுடன் மோதுகிறது.

கடந்த ஆண்டில் இதுவரை இல்லாத அளவுக்கு தமிழகத்தில் கிரிக்கெட் உற்சாகத்தை ஏற்படுத்திய பெப்சிகோ இந்தியாவின் 7-அப் எலுமிச்சை குளிர்பானம், 7-அப் லெமன் பட்டாளம் போட்டிகள் பிரம்மாண்ட முறையில் தொடங்குவதாக அறிவித்தது.

தமிழகத்தில் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் தங்களது திறமையை சென்னை சூப்பர் கிங்ஸ் அணியுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதற்கான ஒரு பொன்னான வாய்ப்பை 7-அப் லெமன் பட்டாளம் என்ற இந்த பிரத்யேகமான போட்டி அளிக்கிறது.

இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் மகேந்திர சிங் டோனி, சர்வதேச கிரிக்கெட் சூப்பர் ஸ்டார்களான மேத்யு ஹைடன் மற்றும் முத்தையா முரளீதரன் போன்ற தங்களுக்கு பிடித்தமான கிரிக்கெட் வீரர்களுடன் ரசிகர்கள் தங்களை ஒப்பிட்டு மகிழலாம்.

திருச்சியில் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் தங்களது 7-அப் லெமன் பட்டாளம் அணியை உருவாக்கிக் கொண்டு உலகின் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்களுடன் மோதும் பொன்னான வாய்ப்பினை பெறலாம்.

7-அப் லெமன் பட்டாளம் என்ற இந்தபிரத்யேகமான போட்டி 7-அப் ஸ்டைல் கிரிக்கெட் ஆட்டமாகும். இதில் ஓவருக்கு 7 பந்துகள் கொண்ட 7 ஓவர்கள் இருக்கும்.